தலைவரே! பதிலுண்டா?

ஆசிரியர்

கே. தங்கராஜு

திருவாரூர்

*

...மைப் பண்ணை

...P.O. திருச்சிராப்பள்ளி

R34
N49
172821

முதல் பதிப்பு ஆகஸ்ட் 1949. Copies 3000.

எமது வெளியீடுகள்

நடிகவேள் **M. R.** ராதா எழுதிய:

ஈ. வே. ரா. இறப்பதென்றோ?	0—5—0
அண்ணாவின் அவசரம்	0—2—0
கலையும் நிலையும்	(அச்சில்)

திருவாரூர் K. தங்கராஜு எழுதிய:

ராம ராஜ்யத்திலே ராதா	0—4—0
தலைவரே பதிலுண்டா ?	0—5—0
ரத்தக் கண்ணீர் (நாடகம்)	(அச்சில்)

நடிகவேள் ராதா (வரலாறு)

விரைவில் வெளிவருகிறது

புதுமைப் பண்ணை, திருச்சிராப்பள்ளி

விலை அணா 0-5-0

தலைவரே! பதிலுண்டா?

—:o:—

"கழகத் தலைவரே! திராவிடப் பெரியவரே! ராமசாமி நாயக்கரே! உம்மைத்தான் கேட்கின்றேன் பதிலுண்டா என்று? கருஞ்சட்டை யணிந்து கொண்டு, காலிகளைக் கூட்டி வைத்துக் கொண்டு, கைத்தடி சகிதமாகக் காடு, மேடெல்லாம் சுற்றி வந்து கண்டபடி உளருகின்ற சண்டமாருத சண்டப் பிரசண்ட சவால் வீரரே உம்மைத்தான் கேட்கின்றேன் பதிலுண்டா என்று.........

பார்ப்பனரைத் திருத்தப்போவதாயும், இதிகாசங்களை அழிக்கப்போவதாயும் கூறிக்கொண்டு அந்தரங்கத்திலே ஆட்சியைக் கவிழ்த்து அரசியலைக் கைப்பற்றி அரசோச்ச ஆசைப்படுகின்ற ஈரோட்டுப் பெரியவரே! ஈ. வே. ராமசாமியாரே! உமக்குத்தான் சவால் விடுக்கின்றேன்.

நீர் உண்மையிலேயே திராவிடர்களின் தலைவரானால், கருஞ்சட்டை வீரர்களின் தந்தையானால், மக்களில் பெரும்பகுதியினர் உம்மைப் பின்பற்றுவது உண்மையானால், புறப்பட்டு வாரும் என்னுடன், தமிழ் நாட்டிலே நீர் கூறுகின்ற எந்தத் தொகுதியில் வேண்டுமானாலும் போட்டியிடுவோம். தேர்தலிலே என்னை ஜெயித்துவிட்டால் பிறகு நீர் கூறுவதைக் கூறிக்கொண்டிரும்,

நானும் ஒப்புக்கொள்கின்றேன். தைரியமுண்டா? புறப்படு வீரா? பதில்கூறுவீரா?.........

மேலே கூறப்பட்டிருப்பது...........நமது மதிப்புக்குரிய தோழர்........சே........இல்லை. திரு.........உம் ஹும் ராஷ்டிரபதி பட்டாபி சித்தாராமையாவின் பக்கத் துணை, தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர், அ. இ. கா. கா. க. அங்கத்தினர், அரசியல் நிர்ணய சபை மெம்பர். ஸ்ரீமான், ஸ்ரீஜத், உயர் திரு, காமராஜ் நாடார் M. L. A. அவர்கள் திருவாய் மலர்ந்தருளியது—பல கூட்டங்களிலே!

தேர்தல் நெருங்க நெருங்க வயிற்றிலே நெருப்பைக் கட்டிக்கொண்டிருக்கும் விருதை வீரர்—வெகுநாளைய காங்கிரஸ் தொண்டர்—தற்காலத் தலைவர் 110° ஜுர வேகத்திலே (தேர்தல் ஜுரந்தான்) உளறியிருப்பது தான் அந்தப் பொன் மொழிகளின் கருத்துக்கொண்ட பிரசங்க மாரிகள்.

எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை யென்றுனும் எவனே ஒருவன்—இது அந்த ரகத்தைச் சேராவிட்டாலும், சும்மா கிடந்த பிள்ளைப் பூச்சியை வயிற்றிலே வைத்துக் கட்டிக் கொண்டு "ஐயோ குத்துதே குடையுதே" என்று அலறினும் மற்றொரு அப்பாவி, அந்த ரகத்திலே தான் இருக்கிறது இது என்று நான் கூறு விட்டாலும் நீங்கள் கண்டிப்பாக நினைக்காமல் இருக்க முடியாது.........

பெரியார் ராமசாமி இந்தத் தலைவரை எங்காவது போட்டிக்கு அழைத்தாரா? தேர்தலில் நிற்கும்படி கூப்பிட்டாரா? கழகம் அறிக்கை விடுத்ததா? அல்லது கருஞ்சட்டை வீரர்கள் யாரேனும் அழைத்தார்களா? இந்த மாபெருந் தலைவரைப் பார்த்து, மனது வைத்து

யாங்கள் உய்யும் வழியை—இனிமேல் மேற்கொள்ள வேண்டிய திட்டத்தை தீட்டிக் கொடுங்களென்று?

பிறகு ஏன் இவர்.........கடந்த சில மாதங்களாக செல்லுமிடங்களி லெல்லாம் கருப்புச் சட்டைக்காரர்களைப் பற்றியும், பெரியார் ராமசாமியைப் பற்றியும் கண்டவாறு குளறியடித்துக் கொண்டு வாயில் வந்தவாறு பிதற்றித்திரிகிறார் ....குடியாத்தத்திலே, வேலூரிலே, கரூரிலே......... கண்ட இடங்களிலேயெல்லாம்...........

நாடார் போகின்ற வேகத்தையும், விடுகின்ற சவாலையும் பார்க்கும் போது நாள் நெருங்கிவிட்டது போலல்லவா தெரிகிறது அவரது ஏகபோக இந்நாட்டுக் காங்கிரஸ் அரசியல் வாழ்வுக்கு.........இதை நான் கூறவில்லை, நாடு கூறுகிறது—நாடாரே உணர்ந்திருப்பார் என்றே நினைக்கின்றேன்! மறந்திருந்தால் சில வார்த்தைகள் கூற வேண்டியது அவசியமல்லவா? அவரது மாஜி வரவேற்பாளன் என்ற முறையிலே............

* * *

வீதிகளிலெல்லாம் மகர தோரணங்கள், மாடங்கள், மாடிகள், கோவில்களிலெல்லாம் கோல விளக்குகள், அவற்றையழகு படுத்தும் கொடிகளும் கோலாகலப் படுத்துகின்றன...........நகரம் விதவித மான விளக்குகளினால் புது வண்ணம் பெற்றிருக்கின்றது. ஆடவரும், பெண்டிரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர் கையில் மலர் மாலைகளுடன்.........மணியோ ஓடிக்கொண்டே யிருக்கிறது...........நிமிஷத்துக் கொருமுறை கூட்டம் யாரையோ எதிர்பார்த்து, எதிர்பார்த்து

ஏங்கியிடுகின்ற கூச்சல், நகருக்கே ஒரு அலாதி நாதத்தை ஏற்படுத்துகிறது......ஆம் 1945-ம் ஆண்டு ஜுலை மாதம் 25-ம் நாள்தான் அது......திருவாரூர் திரண்டு நிற்கிறது......ஒரே தெருவில்.........அங்குதான் வரப்போகிருராம் அவர்.........மணியோ 10க்கு மேலாகிறது.........உம்.........கூட்டத்தில் ஒருவரும் அசையவில்லை......அதோ வெகுதூரத்தில் பெருமுழக்கம் கேட்கிறது........ஆமாம்...,...ஜே......ஜே.........வெள்ளையனை விரட்ட வெஞ்சிறை புகுந்த காமராஜுக்கு ஜே! ஆங்கில ஏகாதிபத்யத்தை அடித்து விரட்ட அரும் பாடுபட்ட அண்ணல் காமராஜுக்கு ஜே! தமிழ் நாட்டுத் தலைவர்... தமிழகத்தின் ஒப்பற்ற தியாகி, விருது நகர் பெற்றெடுத்த வீரர்......மற்றும் பலப்பல......அவர்களுக்கு ஜே! ஜே!...... வந்து விட்டார் மேடைக்கு.........

ஆகா! கண்டோம் கண்டோம்......காந்தீயத்தின் நிழலிலே, சத்தியத்தின் சாயலைப் பின் பற்றி நித்தியமும் ஏழைகளுக்கு உதவும் எம்மானைக் கண்டோம்! ஐந்தாண்டு வெஞ்சிறைப் புகுந்து ஆங்கிலேயரை அடிபணியச் செய்த அண்ணலைக் கண்டோம்!......அரைக் கைச் சட்டையும் அதற்கேற்றசிறு கைக்குட்டையும், நான்கு முழ வேட்டியும்மட்டுமே அணிந்து விடுதலைக்கே உழைக்கும் வீரரைக் கண்டோம்! என பண்பாடினர் சிலர். களிபேருவகை தாங்காது கிடந்து கதறினர் சிலர். ஆடினர் சிலர். அந்த ஆட்டம் தாங்காது கும்பலிலே கிடந்து வாடினர் சிலர்..... இந்த நேரத்தைப்பயன்படுத்தாது விட்டால் வாய்க்குமோ இம்மாதிரி வாய்ப்பு என்று கழட்டினர் சிலர். (ஏமாந்தவர்களின் காது, கழுத்திலே கிடந்தவற்றைத்தான் குறிப்பிடுகின்றேன்)

அத்தனை ஆரவாரத்தையும், அமளியையும் அடக்கிக் கொண்டு தலைவர் பேசலானார்: "பெரியோர்களே, தாய் மார்களே, சகோதரர்களே.......... (ஆகா என்ன கனிவு, என்ன நெளிவு அந்தப் பேச்சிலே அன்பு கொட்டியது, அருள் ததும்பியது, இன்பம் பொங்கியது, மகிழ்ச்சி தாண் டவமாடியது).........எனக்கு நீங்கள் இவ்வளவு மாபெரும் வரவேற்பளித்ததற்கு எனது மகிழ்ச்சி, உங்கள் தேச பக்தியின் ஆர்வத்தைக் கண்டு வியக்கின்றேன். காங்கிரஸ் மகாசபை ஏழை, பாட்டாளி மக்களுடையது. ஆகவே வரப்போகின்ற தேர்தலிலே நீங்கள் அனைவரும் கண்ணை மூடிக்கொண்டு மஞ்சள் பெட்டியிலே ஓட்டைப் போட்டு விட்டீர்களானால் பிரிட்டிஷ் வெள்ளை நாய்களை விரட்டிய டித்தவுடன், நாம் சுதந்தரம் பெற்றுவிட்டால்.........உங் கள் குறைகள் ஆடிக் காற்றிலே அகப்பட்ட பஞ்சைப் போல் ஓடிவிடும்.........அப்புறம் நீங்களனைவரும் இந்திர லோக வாசிகளாக மாறிவிடுவீர்கள். (எமலோகம் அல்ல என்பது இங்கு குறிப்பிடத் தக்கது) தேனும், பாலும் உங் கள் வீட்டருகே உள்ள வாய்க்கால்களிலே ஓடிக் கொண் டேயிருக்கும். (கோடையில் வற்றிவிடும் என்று குறிப்பிட வில்லை) ராட்டினங்களெல்லாம் புடவைகளையும், தக்ளிக ளெல்லாம் வேட்டிகளையும் அப்படியே நூற்க ஆரம்பித்து விடும்.

பிறகு மூட்டை தூக்குபவர்கள் எல்லாம் "மொகஞ்ச தாராவுக்கு ஒரு "ஜாலி" டூர் (Tour) கிளம்பிச் சென்று நமது தமிழக நாகரீகங்களைப் பார்த்து வரலாம். (ரயில் சார்ஜ் அப்படி தலைகீழாக இறங்கிவிடும்)

தட்டு தூக்குபவர்களெல்லாம் ஒரு துட்டு செலவி லேயே அனேக அதிசயங்களை ஏரோப்ளேனில் ஏறி காண

லாம், மாடி வீடுகளெல்லாம் மாடு மேய்ப்பவர்களின் வாசஸ்தலங்களாகிவிடும்......" ஐயோ, ஐயோ.........இன்பத்தேன் வந்து பாய்ந்தது அங்கு நின்றவர் வாயிலெல்லாம் (காதில் பாய்ந்தது என்று மகாகவி பாரதியார் பாடியிருந்தாலும், அப்படி காதில் பாய்ந்தால் இனிமையில்லாவிட்டாலும் கெடுதல் ஆகும் என்பதற்காகவே வாயிலே பாய்ந்தது என்று எழுதியிருக்கிறேன்.)

பிறகு என்ன சொல்ல வேண்டும்......தலைவர் பேசி முடித்தார் வரவேற்பு வைபவங்கள் முடிந்தது.............. தொண்டர்களை சந்தித்துப் பேசினர்.........சிறை சென்ற தியாகிகளுடன் சல்லாபித்தார்......ஏழைகளுடன் அளவளாவினர்......குடிசையிலே விருந்துண்டார்......குபேரர்களைப் பார்க்கவும் கூசினர்.........புறப்பட்டார் அடுத்த ஊருக்கு......அங்கும்......ஏன் ? எங்கும்......இப்படியே...

காலம் மாறியது. காமராஜரும் 'கன'மாகிக் கொண்டேபோனர், திருப்பரங்குன்றம் கண்டார்......தீவிரவாதியானர், ஆச்சாரியாரை விரட்டினர். தமிழகத்தின் தன்மானத்தைக் காக்கும் அசகாய சூரரென அனைவரும் மதிக்கலாயினர்......'சின்ன புத்தியும் பெரிய பதவியும்' என்று கல்கியார் அளித்த பட்டத்தைப் பற்றிக் கவலைப்பட்டதாகக்கூட தெரியவில்லை......தமிழர்களின் ஆதரவு அந்த அளவுக்கு ஏறிப்போய்விட்டது நண்பர் நாடாருக்கு...... பல ஊர்களில் 'கல்கி தகனம்' கூட நடந்தது என்ருல் பாருங்களேன் !

கல்கியார் என்ன......காந்தியார் கூட மிரண்டுவிட்டார் காமராஜரின் செல்வாக்கைக் கண்டு. 'கோஷ்டி' என்று கூறிவிட்டு கொஞ்ச காலம் குதர்க்கவாதம் கூட புரிந்

தார் மகாத்மா. அந்த அளவுக்கு......அன்பர் நாடா ருக்கு நாட்டு மக்கள் செல்வாக்களித்திருந்தனர்.

"வெற்றி முழக்கிடுவோம்! வெண்சங்கு ஊதிடு வோம்!" சுதந்தர கீதம் ஒலிக்க ஆரம்பித்தது.........காம ராஜருக்கும் "யோகம்" மங்களகரமாக ஆரம்பித்துவிட் டது, ஏனையோரைப் போலல்லாது......

வெறும் M. L. A. மந்திரி சபையையே ஆட்டிவைக் கும் "Minister Maker" ஆனார்......கேட்கவா வேண்டும். தன் சம்மதமின்றி பிரதமரான பிரகாசத்தை முன்னுக்கு கொண்டு வந்துவிட்டார்......மந்திரி சபையிலிருந்து நடு வீதிக்குத்தான்.

ஓமாந்தூராரை ஒன்றும் அறியாத அப்பாவி எனக் கண்டு அவரை பிரதமராக்கினர்......ஆட்சி அவர் சொல் கேட்க ஆரம்பித்தது. அவ்வளவுதான் "ஐயா" குட்டி ஹிட்லராகிவிட்டார்.

ஏழ்மை பறந்தது—ஏரோப்ளேன் வாசம் பிறந்தது- M. L. A. க்களை மந்திரியாக்கினர்-மந்திரிகளை M. L. A. ஆக்கினர்—எதிர்த்துக் கேட்க யாருமற்றவரானர். காம ராசர்போக்கு கந்தபுராண சுப்பிரமணியர் சூலாயுதத்தின் வேகத்தையும் மிஞ்ச ஆரம்பித்துவிட்டது, (புராண பக்தர் களுக்கு சுலபமாகப் புரியுமென்றுதான் இதைக் கூறு கின்றேன்).

வந்தாரய்யா வல்லத்தரசு.........கட்சி கட்டினர் காமராஜைக் கவிழ்க்க.........காமராஜர்மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் வந்தது. ஆனல் வல்லத்தரசு பள் ளத்தில் விழுந்துவிட்டார்.........காமராஜரின் படை பலம்,

பத்திரிகை பலம் அந்த அளவுக்கு வேலை செய்துவிட்டது.........

பிறகு என்ன, தட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டபிரசண்டன்தானே. காமராஜரை மிஞ்ச தமிழ்நாட்டில் காங்கிரசிலே ஆட்கள் கிடையாது என்று கூறும் வண்ணம் நடந்துகொண்டார். பஞ்சதந்திரவல்லுநராம் பார்ப்பனர்தம் யோசனையின்வாறே நடக்க ஆரம்பித்துவிட்டார்.

எந்த ஆச்சாரியாரை விரட்ட திருப்பரங்குன்றம் உண்டாக்கினாரோ—எந்த ஆச்சாரியாருக்குத் தமிழ்நாட்டு காங்கிரசிலே ஒரு நாலணா அங்கத்தினர் பதவிகூட கிடையாது என்றாரோ—எந்த ஆச்சாரியாரின் கும்பலால் தமிழ்நாடு குட்டிச்சுவராகிவிட்டது என்றாரோ—அதே ஆசாரியாருக்கு, அல்ல அதைக்கூட ஓரளவுக்கு கௌரவமான 'டங்கர்க்' என்று கூறிவிடலாம்- அந்த ஆச்சாரியாரின் சிஷ்ய குஞ்சுகளுக்குத் தலை வணங்கி, தாள் பணிந்து.........

வைத்தியநாதனே. வம்பர்கள் தோழனே
வகையேதுமின்றித் தவிக்கும் என்னை
வந்துநீ ஆளவேண்டும் உன் பெரும்
வலுவுள்ள படைகள் சகிதம்.........

என்று கசிந்துருகி, கண்ணீர் மல்கி, பண்பாட ஆரம்பித்துவிட்டார்.

ஆரியமாவிடும் அந்த அரிய சந்தர்ப்பத்தை 'பெரிய பதவியும் சின்ன புத்தியும்' என்று எழுதிய அதே பேனா காமராஜரை—காந்தியாருக்கு ஒப்பிட்டது.- மடையன்,

மண்டூகம் என்று வர்ணித்த அக்ரகாரம் தியாகி, விவேகி என வியாக்யானம் பேசியது. லோலன், ஆரியர்களின் காலன் எனக் கிண்டல் பேசிய மண்டைக் கர்விகள், சீலன், காந்தியத்தின் பாலன் என்று விளக்க ஆரம்பித்து விட்டார்கள்.

அப்புறம் என்னவேண்டும்........இனிமேல் யார் எதிர்த்து என்ன பயன்........காமராஜரின் துணைவர் களாம் வேதிய வித்தகர்களும், விபீஷணர் தம்பக்தர்களும் இருக்கும்போது வல்லத்தரசு என்ன?........எந்த வகை யான அரசும் (Govt) கூட அடிபணியவேண்டியதுதானே. எதிரிகள் ஒருவர்பின் ஒருவராகக் குழிதோண்டிப் புதைக் கப்படலாயினர்.

தமிழ்நாட்டின் வருங்கால ஏகச் சக்ராதிபதி கனவு காண ஆரம்பித்துவிட்டார்.........விருதை வீரர்.......... பழமையை மறந்தார். பொசட்டோவும், கன்னிமாரா வும் பொழுதுபோக்கு ஸ்தலங்களாயின. மதுரையும், திருச்சியும் அவர் மனதைக் கலங்கச் செய்யவில்லை..... (தொழிலாளர் ஸ்ட்ரைக்கின்போது சுற்றுப்பயணம் சென்ற காலை அவ்வூர்களில் நாடாருக்கு நடந்த கல் மாரி, சொல்மாரிகளைத்தான் குறிப்பிடுகின்றேன்.)

பிறகு என்ன? திடீர் பக்தர் இல்லங்களுக்கு திக்விஜ யம் செய்தார். படீர்முதலாளிகளுக்குப் பரிவு காட்டினர்... சீமான்களின் விருந்து...சிங்காரிகளின் நடனம்...கோமளங் களின் கீதம்......கோகிலங்களின் கானம்......பூமான் களின் நட்பு......புது கவர்னர்களின் பார்ட்டி......டில்லி மூலவர்களின் பேட்டி ஒன்றையும் பாக்கி வைக்கவில்லை... பழைய காமராஜர் ஆளே மாறிப்போனர்.

என்னப்பா42 ஆகஸ்ட்! அலிபுரமா? ஆறு மாதமா அதற்கென்ன இப்போது? என்று பேச ஆரம்பித்துவிட்டார் தொண்டர்களைப்பார்த்து.

ஏழை பங்காளனாக, தொண்டர் தம் தொண்டராக, தியாகத்தின் உருவமாக விளங்கிய காமராஜர் மக்களின் மன நிலையறிந்து—விவசாயிகளின் குறையுணர்ந்து—விவேகிகளின் உரை தெரிந்து—பாட்டாளிகளின் கறை போக்க உளம் துடித்த பாரதமாதா புத்ரராம் காமராஜர்......பூமான்களின் வளமறிந்து—பூவையர்களின் உளமறிந்து—செல்வர்களின் தரம் தெரிந்து—தேர்தல் வீரர்களின் நிலை தெரிந்து தகாத செயல் புரிய ஆரம்பித்துவிட்டார்.

சுதந்திரம் வந்த வேகத்திலேயே.........மக்களுக்கு சுதந்திரத்தின் சாயலைக் காட்டிவிட ஆசைப்பட்ட அன்பர் முனிஸிபல் தேர்தலிலே......சகல முனிஸிபாலிடிகளிலும் தனது சர்வாதிகாரத்தைக் காட்டினார். ஒவ்வொரு முனிஸிபாலிடிக்கும் ஒரு மிட்டாதாரரை, திடீர்ப் பணக்காரரைத் தேர்ந்தெடுத்தார். தேர்தலிலே போட்டியிடச் செய்தார். அவரையே சேர்மனாக்க உறுதியளித்தார். அவர் இஷ்டப்படியே கவுன்சிலர்களை நிறுத்துமாறு ஆக்ஞாபித்தார். அவர்களுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரம் செய்ய சூறுவளி வேகத்தில் புறப்பட்டும் விட்டார்.

45ல் வெளிவந்த அதே காமராஜர்தான் 47 இறுதியிலும் புறப்பட்டார்......ஆனல் இப்பொழுது அவர் கண்டது......அதே திருவாரூர்......அதே இடந்தான். இப்பொழுதும் மக்கள் கூடித்தான் இருக்கிறார்கள். பெருஅளவிலே ஆரவாரம் கேட்டுக்கொண்டுதானிருக்

கிறது. ஆனல் இப்பொழுது மகரதோரணமில்லை—மங்கள வாத்தியமில்லை—வண்ண விளக்குகள் கிடையாது—வாழ்த்தொலிப் பலகைகள் இல்லை. மக்கள் யாரையோ எதிர்பார்த்துக் கொண்டு தானிருக்கிருர்கள்; அவர்கள் முகத்திலே பழய கனிவு இல்லை—ஆனல் மிகவும் துணிவுடனே நிற்கின்றனர். மகிழ்ச்சி இல்லை—பெரும் இகழ்ச்சி காணப்பட்டது, புன்னகை தவழவில்லை-கோர சிரிப்பொலி இருந்தது.

ஒழிக, திரும்பிப்போ, மக்களுக்குத் துரோகம் செய்யாதே, ஒருவர் அல்ல......பலர் போடும் கூச்சல் இது. ஆமாம் அவரேதான் வந்துவிட்டாராம் மறுபடியும்.

மங்கலத்தார்வீட்டு மாடியிலே ஐநான்கு கறிவகையுடன்—அறுசுவை விருந்துண்டு—அவ்வாண்டு காரேறி—ஆடம்பரம் பின் தொடர மக்கள் மன்றத்துக்கு வந்துவிட்டார்......மேடைக்கும் வந்தார்......பேசவும்செய்தார். "மஞ்சள் பெட்டிக்கே ஓட்டளியுங்கள் என்று"........... மக்களின் கூட்டம் "மஞ்சள் பெட்டி லஞ்சப்பெட்டி" காங்கிரஸின் கொள்கைகளுக்கே விரோதம். தலைவரே! பெரியவரே! தகாத செய்கையில் நீர் ஏன் இறங்க வேண்டும்? திரும்பிப்போ—இது என்ன தேர்தலா? அல்லது

திமர் பக்தர்களுக்குப் பதவியளிப்பு விழாவா? வேண்டாம் எனக் கூறினர்.

ஏன் ஓரினைர் மேடையிலும் ஏறினர். ஐயா ஆருண்டு சிறை சென்ற என்னைப்பாரும், என்னைப் பார்த்துப் பேச உங்களுக்கு மனமில்லையா? வீட்டைத் துறந்தேன், மாதா, பிதாக்களை மறந்தேன், பிச்சை யெடுத்தேன், கொடிபிடித்தேன், கூட்டங்கள் நடத்தினேன், தடியடி

பட்டேன், தாங்கொணு துயருக்காளனேன், வெள்ளையன் ஆட்சியிலே நான்பட்ட துயர்களுக்குச் சின்னமாம் என் காயங்களைப் பாரும்......சிறைக்குச் சென்று சென்று சிதைந்துபோன என் நெஞ்சம் குமுறு வதைப் பாரும், தியாகத்தின் உருவம்—மக்களின் தலைவன்—மாசற்ற உள்ளத்தினன் என்று உங்களைக் கூறுகிருர்களே சற்று மனமிரங்கி நான் சொல்லுவதைக்கேட்க மாட்டீர்களா?

“எந்த ஊர் மக்களின் மானத்தைக் காக்க சிறைசென்றேனே—எந்த ஊரின் பெயருக்கு இழுக்கு வரக் கூடாது என்று வெள்ளையன் துப்பாக்கி முனைகளுக்கு எதிரில் என் மார்பைக் காட்டினேனே—எந்த ஊர் மக்களின் நல னுக்காக அல்லும், பகலும் உழைத்து வருகின்றேனே அந்த ஊரின் நகராட்சியிலே நான் ஒரு சாதாரண அங்கம் வகிக்கக் கூட லாயக்கற்றவன் என்று........நீங்களே! உங்கள் கமிட்டியே கூறுவது முறையா? தலைவரே ஏன் மௌனமாக இருக்கிறீர்கள். பதில் கூறுங்கள்........”

“நான் எப்படி கீழ்த்தரமானேன். நேற்று வரை காங்கிரசுக்கு விரோதமாய் நடந்தவரை விட—தனது செல்வத்திலே ஒரு சல்லி கூட இந்த தறுதலைகளுக்குக் கொடுக்க முடியாது என்று போராட்டக் காலங்களிலே கூறிய புண்ணிய மூர்த்திகளை விட—ராவ்பகதூர்—திவான் பகதூர் பட்டங்கள் வாங்கி வெள்ளையனின் செல் லப் பிள்ளைகளாகத் திகழ்ந்த இவர்களைவிட நான் எந்த வகையில் குறைந்துபோனேன்........”

சீமான்கள் அவர்கள் பணத்தைை அள்ளிக்கொட்டி மக்களைத் தங்கள் பால் இழுக்கிருர்கள்—அவர்கள் மாளிகைக் காரர்கள்-அவர்களுக்கு மஞ்சள் பெட்டியை விற்றுவிட்டீர்

கள். நான் ஏழை, ஆனால் உழைத்தவன்—என் பெட்டியோ நீலம். இது நீதியில்லாத கட்சியின் முடிவு......எந்த மஞ்சள் பெட்டியின் வெற்றிக்காக உழைத்தேனே, உயிரை விடவும் சம்மதித்தேனே, அந்த மஞ்சள் பெட்டி இன்று என் எதிரிக்கு. நியாயமா? அடுக்குமா? பதில் கூறுங்களேயா? இது தானா காங்கிரஸின் திட்டம்?

இது தானா காந்தியடிகள் உங்களுக்கு, ஏன் எங்களுக்கும் சேர்த்துக் கூறிச் சென்றவைகள் — இதுதானா தியாக மூர்த்திகளின் லட்சணம்? ஐயா, இம்மாதிரி அக்ரமம் எங்காவது உண்டா?

தாங்களோ தலைவர். தங்களைத் தாங்க நான்குபேர், தூங்கச் செய்ய இருவர், கார் ஓட்ட பலர், பார்புகழ பத்திரிகைகளில் எழுத அனேகர், மாளிகைகள் அளிக்க கணக்கற்றவர், கேளிக்கைகள் நடத்திக் காட்ட வேண்டியவர்கள் உண்டு.

நானோ தொண்டன். என்னைத் திரும்பிப் பார்க்க ஆள் கிடையாது, என் வாழ்க்கையைப் பற்றி சிந்திக்க நாதி கிடையாது, தாங்கள் செய்த தியாகத்திற்குத் தாங்கள் அடைந்திருப்பது தலைவர் பதவி—தாங்க முடியாத புகழ்—நிகரற்ற செல்வாக்கு—நினைத்ததை முடிக்கும் அதிகாரம். நான் செய்த தியாகத்துக்கு நான் அடைந்திருப்பது நீங்காத அவப் பெயர்—நினைத்தால் நெஞ்சம் குமுறும்நிலை—நாளைக்கென்ன செய்வோம் என நாளை ஓட்டும் வாழ்வு—இந்த நிலையில் எனது கட்சியே என்னைக் காலால் உதைத்துத் தள்ளுவது நீதியா? ஏன் மௌனம்? பதில் கூறுங்கள் என்றார்......

"உம் தம்பி அவசரப்படாதே, பதில்சொல்லுகிறேன், அங்கொரு கூட்டம் இருக்கிறது வந்துடறேன்" என்றார் காமராஜர்.

அவ்வளவு தான் கும்பல் ஆத்திரம் தாங்காமல் கட்டுக் கடங்காது, என்ன தலைவனடா நீ? என்று சப்தமிட்டுக்கொண்டு மேடையை நெருங்கியது. திடீரென்று காரிலே பாய்ந்து கன வேகமாக பறந்தோடி விட்டார் நாடார். ஆனால் பாவம்......அந்தத் தொண்டன் நாடார் பக்தர்களுக்கிடையில்—மிட்டாதார்களின் கொட்டாப்புளி ஆட்களுக்கிடையில்—அகப்பட்டுக் கொண்டான். அவ்வளவு தான் காமராஜுக்கு ஜே! காங்கிரஸுக்கு ஜே! என்று கூறிக்கொண்டே அவனை நையப் புடைத்து விட்டனர்......கேட்க நாதியேது?

இதே நிலைதான் நாடார் சென்ற இடங்களிலெல்லாம் எப்படியோ தேர்தல் முடிந்தது. நாடாருக்கு மட்டுமல்ல நாட்டு மக்களுக்கும் நன்றாகப் புரிந்து விட்டது. நாடாரின் ஜம்பம் வெறும் ஹம்பக் என்று........

புதிய ஒரு உண்மையும் விளங்கி விட்டது. வந்தே மாதரம், காந்திக்கு ஜே! பாரதமாதா புத்திரர்களே பார்த்து ஓட்டளியுங்கள் மஞ்சள் பெட்டிக்கே என்றது எல்லாம், எந்த அளவுக்கு செல்லுபடியாகியது என்று. நாடாரின் மோகத்திலே மயங்கியவர்கள், நாட்டின் மீது திடீர்க் காதல் கொண்ட பணப் பெட்டிகள், பகதூர்ஷாக்கள், மாஜி ராவ்பகதூர்கள்......எல்லோரும் நாடாரின் ஆசி பெற்று காங்கிரஸ் 'அட் ஹாக்' கமிட்டியால் தேர்ந்தெடுக்கப் பெற்றவர்கள் தான். அவர்கள் வாயிலெல்லாம் மண்......அல்ல...,.சிமெண்ட் காங்ரீட் வைத்து அறையப்பட்டு விட்டது.

யார்? சேப்பத்தாங்குடி ஜமீனா?......ஜில்லா போர்டுக்கு நீங்கள்தான் வருங்கால பிரசிடெண்ட். பாதி மங்கலம் நாதியற்ற முதலியாரா?—முனிசிபாலிட்டிக்கு நீங்கள்தான் சேர்மன்.

இந்தப் பொன் மொழிகளில் சிக்கி, சிதைந்து, சீரழிந்து லட்சக் கணக்காக செலவு செய்து இறுதியிலே சிந்தை நொந்து.........வெளியே செல்லக் கூட வழியற்று, தலையிலே முக்காடிட்டுக் கொண்டு மூலையிலே அமர ஆரம்பித்து விட்டார்கள்—நாடாரின் திறமையிலே—பெருமையிலே—அதிகாரத்திலே—பேச்சிலே மயங்கிய அப்பாவிகள்—இல்லை அகம்பாவிகள் அத்தனைபேரும்.

திருவாரூரும், விருதுநகரும், விழுப்புரமும், உடுமலைப்பேட்டையும், ஈரோடும், எந்த ஊருமே சரி நாடாரைப் பார்த்து நகையாட ஆரம்பித்துவிட்டது. பாவம் நாடார் பேசா விரதம் மட்டும் மேற்கொள்ள வில்லை. கண் மூடி மௌனியுமாகி விட்டார்.

......மனிதன் ஆறு மாத 'டைபாய்ட்டில்' அகப்பட்டுப் பிழைத்த......உருவமாகிவிட்டார்.

'தீராதவினையெல்லாம் தீர்த்துவைப்பான் கோவிந்தன்!' என்று பண்பாடிய அவரது பக்த குழாமெல்லாம் வெளியில், மக்களின் முன்னிலையில் தலைகாட்டவே அஞ்சியது. ஆனால் நாடாருக்கு மட்டும் ஒரு பெருங்கிலி பிடித்துக் கொண்டது. அத்துடன் ஒரு மாபெரும் உண்மையும் புலனாகிவிட்டது.

இதுவரையில் எத்தக் கட்சியைப் பற்றி சாதாரணமாகக் கிண்டல் செய்து வந்தாரோ.........எந்தத் தலைவ

ரைப் பற்றியும், அவரது கொள்கைகளைப் பற்றியும்—பார்த்து—கேட்டு—அலட்சிய சிரிப்புச்சிரித்து வந்தாரோ, அதே தலைவர், அவரது கொள்கை, அந்த கொள்கைக்கு மக்கள் காட்டும் மாபெரும் ஆதரவு நாடார் மனக் கண் முன்னே 'விசுவரூபம்' எடுக்க ஆரம்பித்துவிட்டது.

கொஞ்ச காலம் கழகத்தைப்பற்றிய சிந்தனையிலேயே அஞ்ஞாதவாசம் செய்ய ஆரம்பித்துவிட்டார்......அதற்குத்தான் 'காமராஜர் அரசியல் தந்திரம்' என்று பெயர்.

பிறகு மெதுவாக தலையெடுக்க ஆரம்பித்தார். அங்கொரு கூட்டம், இங்கொரு கூட்டமாகப் பேசினர். விஷயம் என்ன?......கழகத்தைப் பற்றிய வசைபுராணம் பாடுவதுதான்.........இடையிலே அரசியலாரைக் கொண்டு தனது செல்வாக்கினால் அவர்களை மிரட்டிமுடிந்த வரையில் கழகத்தை ஒடுக்கப் பிரயத்தனப்பட்டார்.

ஓமாந்தூராரை எந்த நேரத்தில் ஏமாந்தூரார் எனக் கருதி பிரதமராக்கினரோ......அவர் எமகாதகப் பேர்வழி என்பதை விரைவிலேயே உணர்ந்து கொண்டுவிட்டார்.

தனது சகபாடிகளே, ஓமாந்தூராரைத் தாடி வைக்காத ராமசாமி நாய்க்கன் என்று பாமாலை பாட ஆரம்பித்ததைக் கண்டு.....அவர்களுக்கு அபயமளித்தார்—ஓமாந்தூராரை ஒழித்து, ரக்ஷிப்பதாக.

ஓமாந்தூராரைக் கவிழ்க்க நேரத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். ஆச்சாரியார் சென்னை விஜயம் அந்த நல்லவாய்ப்பை நாடாருக்கு நல்கியது. அனுமதியின்றியே மந்திரிகளுடன் நின்று ஆச்சாரியாரை வரவேற்க விமான

நிலையத்துக்குச் சென்றார்; போலீஸ் அதிகாரி வெற்றிகரமான அவமானத்துடன் வெளியே அனுப்பிவிட்டார்...... உடனே சபதம் எடுத்தார்......M. L. A. க்களைச் சந்தித்தார்—தனது கோஷ்டிக்கு அதிக வலுவுண்டாக்கினார்.

ஒருமுறை தனது படைபலத்தைப் பரீக்ஷை பார்த்துத் தாமே மகிழ்ந்துகொண்டார். இப்பொழுதும், பிரகாசத்திற்குச் செய்தது போன்றே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர எத்தனித்தார். ஆனால் ஓமாந்தூராரின் நேர்மை அவரை நிலைகுலையச் செய்தது......எனவே ஆண்டுத் தேர்தல் காலம்வரை காத்திருந்தார் — அவரையும் கவிழ்த்தார் — ராஜா பிரதமரானார்.

*   *   *

இது எல்லோரும் உணர்ந்த ஒன்று......ஏன் இதை நான்கூறுகிறேன் என்றால், நாடாரின் திருவிளையாடல்கள் எவ்வளவு விசித்திரமாக இருக்கிறது என்பதற்குமட்டுமல்ல—உண்மை தெரிந்தவர்களுக்கு எவ்வளவு வேதனையளிக்கிறது என்பதைக் காட்டவே.

ஓமாந்தூரார்கவிழ்ந்து ராஜா பதவி ஏற்றது தான் தாமதம் - நாடாருக்கு ஒத்துழைத்த நண்பர்களெல்லாம் பிடுங்க ஆரம்பித்து விட்டார்கள்—எங்கே எனக்கு மந்திரி பதவி - பதவி - பதவி - பதவி? என்று. பாவம் என்ன செய்வது இப்பொழுது...பிள்ளையார் பிடிக்கக் குரங்காக அல்லவோ மாறிவிட்டது.

ஒரு ஓமாந்தூராரைக் கவிழ்க்கப்போய் ஒன்பது ஆயிரம் பதவிப் பேய்கள் தலைவிரித்தாட ஆரம்பித்து விட்

டதே. இதை அடக்க என்ன செய்வது என்பதே நாடாரின் மூளையைக் குழப்ப ஆரம்பித்துவிட்டது.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கத் திட்டமிட்டுவிட்டார்......பதவிப் பேய்களுக்கு விருந்தளிக்கத் தீர்மானித்தார். எப்படியோ தள்ளிப்போட்டுக்கொண்டே வந்த ஜில்லா போர்டு தேர்தலும் நாள் குறிப்பிடப்பட்டு விட்டது. தனக்குத் தொந்திரவு கொடுத்து வந்த பதவிப் பேய்களை யெல்லாம் ஜில்லா போர்டுகளின் மீது படையெடுக்கத் தூண்டிவிட்டார். அத்துடன் வரப்போகும் சட்டசபைத் தேர்தலுக்கும் ஒத்திகை பார்க்கத் தீர்மானித்து விட்டார்.

பதவிப் பிரியர்கள் - பர்மிட் வேட்டைக்காரர்கள் - தலைமைப் பைத்தியங்கள் - சுரண்டல் வாலாக்கள் அத்தனை பேரையும் அழைத்து உங்கள் இஷ்டப்படி நடக்கத் தயார்—ஆனல் இந்த ஈரோட்டு நாயக்கரும், அவரது கும்பலும் மக்களிடம் ஒன்றுக்குப் பத்தாகக் கூறி நமது மானத்தை வாங்க ஆரம்பித்துவிட்டார்கள், நீங்கள் இந்தத் தேர்தலை சாக்காக வைத்துக்கொண்டு கழகத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிடுங்கள் என்று ஆக்ஞாபித்தார். அரசியலாரைக் கொண்டு தன்னல் முடிந்த வரையிலும் கழகத்தை ஒடுக்க வேண்டிய ஏற்பாடுகளையும் செய்துவிட்டார். தானும் முன்பக்கத்தில் கண்டதுபோல் பிரசங்கமாரிகள் பொழிய ஆரம்பித்துவிட்டார்.

ஆனல் இந்தநேரத்தில்தான் எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்திருக்கிறது. அதைக் காமராஜர் எவ்வளவு தூரம் பயன்படுத்திவிட்டார் தெரியுமா?

பெரியார், மணியம்மை திருமணம்.

திராவிட கழகத்திலே பிளவு.

சும்மா இருப்பாரா காமராஜர். சந்தர்ப்பங்களையும், சாக்குப் போக்குகளையும் சிருஷ்டித்துக்கொண்டிருந்தவருக்கு இந்த செய்தி கிடைத்த பிறகு வேறென்ன வேண்டும்...புறப்பட்டார் கரவேக சரவேகத்தில்.

"கழகத்தைப் பாருங்கள் - அங்கு நடக்கும் கலகத்தைப் பாருங்கள்—ராமசாமியாரைப் பாருங்கள் - வயது எழுபத்திரண்டு - கலியுக தசரதர்—கன்னியை மணந்த காதகர் - அவரது கொள்கையைப் பாருங்கள்—பொது மக்களே! ஏமாராதீர்கள். ஜே! ஜே!......பாரத்மாதாகி ஜே! வந்தேமாதரம். மஞ்சள் பெட்டியை மறந்து விடாதீர்கள், கழகத்தை நம்பாதீர்கள். கடைசியிலே கை விட்டு விடுவார்கள்."

பட்டமரம் துளிர்விட ஆரம்பித்துவிட்டது. குட்டிச் சுவற்றில் மாளிகைகள்கட்ட ஆரம்பத்திட்டம் போடப் பட்டுவிட்டது.

நாடாரின் பாணியிலே நாள்தோறும் துடுக்கு மிகுந்துவிட்டது, கழகத்தவரும் இப்போது சரியாக எதிர்த்துப்பேசக் கூசுகின்றூர்கள். காங்கிரஸ் வாதிகளோ கண்ணும், காதிருந்தும் அதை உபயோகப்படுத்தத் தயங்குகிறூர்கள்-தொழிலாள விவசாயிகளோ துயரக் கடலிலே தத்தளிக்கின்றூர்கள், ஆனல் ஏனைய பொது மக்களுமா எதிர்த்துக் கேட்கக் கூடாது? நாடாரைப் பார்த்து கேட்க, அவரது செய்கையைக் கண்டிக்க யாருமே முன்வரக்கூடாதா?

நாட்டு மக்களின் நன்மதிப்பைப்பெற்று தமிழ்நாட்டுக் காங்கிரஸின் நிரந்தர தலைவராக (தற்போதைக்குத்தான்) ஆனதற்கு மக்களுக்கு அவர் செய்துவருவது என்ன? தான்தோன்றித் தனமாகத்திரிந்து எதிர்கட்சிகளையும், தலைவர்களையும் தடித்தனமாகப் பேசுவதற்குத்தானா இவர் தமிழக காங்கிரஸ் தலைவரானார்?

நாட்டிற்கு நாடார் ஆற்றவேண்டிய உருவகமான வேலைகள் எவ்வளவோ காத்துக்கொண்டிருக்க, அவரது சமுதாயத்துக்கு, இனத்துக்கு எத்தனையோ தொண்டுகள் செய்யவேண்டியதிருக்க, அவற்றையெல்லாம்விடுத்து எதற்கோ வேண்டாதனவற்றிற்கெல்லாம் தன் வாயையும், தன் வாழ்நாளிலேயே கிடைக்காத பொன்னான நேரத்தில் பெரும் பகுதியையும் வீண்விரயம் செய்கிறாரே! இது ஏன்?

தோழர் காமராஜர் கூறுகின்றபடியேதான், பெரியார் ராமசாமி 72 வயதில் கல்யாணம் செய்துகொண்டால் இவருக்கு என்ன வந்தது? அந்தத் திருமணத்தினால் ஏற்படும் லாப நஷ்டம் அவருக்கன்றோ தெரியும்?

அல்லது நண்பர் நாடார் ஈ. வெ. ரா. வீட்டுக் குடும்ப புரோகிதரா? நாள், நட்சத்திரம் பார்க்காது மணம் செய்துகொண்டது இவருக்கு மன வேதனையைக் கொடுத்துவிட்டது என்று கூற? நாடாரும் புரோகிதரல்ல, பெரியாரும் புரோகித தாசரல்ல......இந்த நிலையில் இவருக்கு என்ன வந்துவிட்டது என்று கேட்கிறேன்.

கழகத்திலுள்ளவர்களில் பலர் கேட்கவில்லையா? அதைப்போன்றே இவரும் கேட்கக்கூடாதா? என்றால்?

அவர்களுக்குக் கேட்க உரிமையுண்டே! இதுவரை யில் அய்யா கூறிய வார்த்தைகளுக்கு மறு வார்த்தை பேசாது ஒப்புக்கொண்டுவந்த அவர்கள் ஏதோ தங்கள் கருத்திற்கும், கொள்கைக்கும் இது தவருகத் தெரிவ தாகப்படவே கண்டிக்கிருர்கள்—தந்தையை மகன் கண் டிக்கும் பாணியில் - ரகத்தில் - குரலில். நீர் அப்படி யல்லவே !

சமயம் வாய்க்கும்போது அய்யாவின் செல்வாக்கை கவிழ்க்க காத்துக் கொண்டிருக்கும் சன்மார்க்கர்களின் தலைவரல்லவா தாம்? உமக்கு எப்படி உரிமையுண்டு இதில் தலையிட என்று கேட்கிறேன் ?

நீர் யார் பொதுக் கூட்டங்களிலே அய்யாவை இழிவு படப் பேச என்று கேட்கிறேன்? நீர் என்ன இதுவரையில் அய்யா கூறிய அறவுபதேசங்களை அப்படியே ஏற்றுக் கொண்டுவிட்டீர், இப்போது கண்டிக்க முன் வருவதற்கு என்று கேட்கிறேன் ?

குடும்பச் சண்டையைக் கிளறிவிட்டு பாகம் போடச் செய்து கொள்ளையடிக்கும் பக்கத்து வீட்டு வக்கீல் போலத்தானே நீர் இதில் தலையிடுகிறீர் ? தாறு மாருகப் பேசுகிறீர் ? அகப்பட்ட வரையில் உமக்கு ஆதரவைத் தேடிக் கொள்ளப் பார்க்கிறீர்.

இந்த சந்தடியைச் சாக்காகக் கொண்டு வெந்த வீட் டில் பிடுங்கினது ஆதாயம் என்பது போலத்தானே நீரும் உமது சகாக்களும் இதில் இறங்கியிருக்கிறீர்கள். வேறு உண்மையான கவலையுடன், அய்யோ பாவம்

அய்யா தவறு செய்கிறீரே! அதனால் அழிந்துவிடுமே கட்சி என்று ஆயாசப்பட்டு நீர் இதில் பிரவேசிப்பதாகச் சொல்ல முடியாதே.

அப்படி நினைப்பதற்குக் கூட உமது நிலை இடங்கொடாதே! அய்யாவின் செய்கையின் உண்மை நிலையை எங்கள் கட்சியிலேயே உணர சிலருக்கு முடியாதிருக்கும் போது உமக்கு எங்கே அந்தப் புதுமை புரியப்போகிறது? பாவம் நீர்படித்ததெல்லாம், அன்றிலிருந்து இன்றுவரையில் எடுத்துக் கொண்டால் கூட முன்பு தொண்டராக இருக்கும்போது, கொடி தூக்கும் புராணம் — தடியடி அந்தாதி — தண்டவாளம், தந்திக்கம்பி தகர்க்கும் பா— ஊர்சுற்றும் உலா—பிறகு தலைவரானதும் கும்பல் சேர்க்கும் பண்—வம்பு வளர்க்கும் தத்துவம்—மமதை அகராதி —மண்டைக் கர்வ சாஸ்திரம்—மந்திரி மாற்றும் மாஜிக் இவைகள் தானே.........

எனவே உமக்கெங்கே பகுத்தறிவுப் பண் – பாமரர்களின் புண் – எளியோர்களின் ரத்தம் – ஏமாளிகளின் நிலை – ஆரியர்களின் சூது – அய்யாவின் அறிவுபதேசம்– அவரது அறிய தத்துவ விளக்கம் – நாட்டு மக்களின் நிலை தெரியப் போகிறது? தெரிந்திருந்தால் இலக்காகி இருப்பீரா இந்தத் திமிர்வாத நோய்க்கு?

எனவேதான் கூறுகிறேன், காமராஜரே! இனியாவது கழகத்தையும், அதன் கொள்கைகளையும், அதன் தலைவரையும் கண்டபடி சித்தரிக்காது உமது வேலையைப் பாரும்......உமக்கேன் இந்த வம்பு. கழகத் தோழர்கள் இன்றைக்கு அடித்துக் கொள்வார்கள் நாளை சேர்ந்து

172824

கொள்வார்கள். அவர்கள் ஒரே இனம், ஒரே ரத்தம், ஒரே உணர்ச்சி, ஒரே கொள்கை, ஒரே மனப்பான்மை யுடையவர்கள்.

நீரும் ஒரே இனமும், ரத்தமும் உடையவரானலும் உமது ரத்தத்திலும், நினைவிலும் ஆரிய விஷங் கலந்து விட்டது. நீர் பாவம் கொடிய வியாதிக்கு ஆளாகியிருக்கிறீர். விரைவில் உமது நோயைக் குணப்படுத்தாவிடில் உமது நிலை மிகவும் கவலைக்கிடமானதாகிவிடும்.

ஆகவே தான் எங்கள் அய்யாவுக்கு மருத்துவம் பார்க்கவரும் வைத்திய சிகாமணியே! நீர் முதலில் உமது நோய்க்கு மருந்து சாப்பிடும்......பாவம் அந்த மருந்துக்கு நீர் எங்கே போவீர். வேண்டுமானல் அய்யாவிடமே கேளும். இரண்டு பொட்டலம் பகுத்தறிவு செந்தூரமும், மேலுக்கு இன உணர்ச்சித் தைலமும் கொடுப்பார். உமது நோய் ஒரே நொடியில் பறந்துவிடும். பிறகு வேண்டுமானல் நீர் எங்களிலே ஒருவர் ஆன பின்பு நமது நன்மை தீமைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வோம். ஆகவே நோயாளி வைத்தியரே வியாதியை முற்றவிடாதீர். ஆபத்து.........

நாடாரே! நாட்டுக்கு நல்ல காரியங்கள் பல செய்ய வேண்டிய நிலையில் இன்றுள்ளவரே! உம்மிடம் இவ்வளவு கொடிய நோய், நொடிகளை வைத்துக்கொண்டு ஏன் உம்மால் முடியாதவற்றிலெல்லாம் வாயைக் கொடுத்து வாதனைப் படுகிறீர்.

நீர் இன்றிருக்கும் நிலைமையில் எவ்வளவோ நல்ல காரியங்கள் செய்யலாமே! எந்தக் காரியமென்று கேட்

கிறீரா? ஆமாம் உமக்கெங்கே தெரியப் போகிறது...... அறுபது மைல் வேகத்திலே, அழகான "ப்யூக்" காரிலே உல்லாசப் பயணம் போகும் போது - கரடு முரடான அந்த மலைகளின் இடையிலே.

உங்களைப்போன்ற கனவான்கள் செல்வதற்கென்றே சீர்செய்யப்பட்ட பாதைகளிலே நீங்கள் பறந்துசெல்லும் போது பார்த்திருப்பீரா! பக்கத்திலுள்ள குன்றுகளில் அமர்ந்திருக்கும் பாதி தேய்ந்த மனித உருவங்களை? அவர்கள் என்ன செய்கிறார்கள் எதற்காகச் செய்கிறார்கள் எப்படி வாழ்கிறார்கள் என்றெல்லாம் எண்ணியதுண்டா உமது உள்ளம்?

ஐஸ் கிரஷ் அருந்திவிட்டு, அழகான வெட்டிவேர் விசிறி இருபக்கமும் ஊசலாட—அதன்மீது தெளிக்கப் பட்ட பன்னீர் உம்மீது பனித்துளிகளெனப் பக்குவமாகப் பெய்ய—உமது உள்ளம் உவகைக்கடலில்—மிதக்க நீர் உல் லாசப் பயணம் போகும்போது—அந்த தேய்ந்த உருவங் களை கொடுங்கதிரோன் தாக்க—அவர்கள் கையிலுள்ள சம்மட்டி அருகிலுள்ள பாறைகளைத் தகர்க்க—ஆயாசம் தாங்காது உடலெல்லாம் வியர்க்க—ஆவி சோர உழைத் தாலும் நல் வாழ்வு காண வழியில்லையே இந்தப் பாவி களின் நாட்டிலே! என்று சிந்தித்து சிந்தித்து உள்ளம் உடைய—அந்த நேரத்திலே ஒரு சிறு கற்பாறைத்துண்டு அதன் கண்ணிலே பாய்ந்தோட அந்த பதைபதைக்கும் வெயிலிலே கையிலுள்ள ஆயுதத்தை கீழே போட்டு விட்டு அம்மாடா! என்று கொட்டுகின்ற குருதியை தன் இருகரத்தால் வழித்துக்கொண்டே கீழே உட்காரும் உருவங்களை—நீங்கள் பார்த்ததுண்டா? எப்படி பார்க்க

முடியும்? உமது கார் போகும் வேகத்திலே இந்தக்காட்சி எங்கே புலப்படப்போகிறது.........

மாலைக்கதிரவன் பக்கத்திலுள்ள மலையிலே சென்று பதுங்க அருகிலுள்ள ஆல மரத்தில் தன் அருமந்த குழந்தைக்கு ஒரு கந்தலைக்கட்டி அதில் கிடத்திவிட்டு—மூன்று கல்லை எடுத்துவைத்து அதன்மீது ஒரு மூளிச் சட்டியை வைத்து, காலையிலிருந்து வயலிலே பொருக்கி எடுத்து, குத்திப்புடைத்த ஒரு பிடி அரிசியை அதிலே கொட்டித் தண்ணீரை ஊற்றி—தவிக்கும் குழந்தைக்கு கஞ்சி தயாரிக்க நெருப்பைத்தேடும் சமயம் அருகிலே விறகு தேடச் சென்ற கணவன் வீரிட்டு அலறும் குரல் கேட்டு ஓடிப்பார்க்க—கருநாகம் தீண்டி கட்டைபோல் சாய்ந்துகிடக்கும் நிலையைக்கண்டு கதறும் பேதைகளின் தண்ராவிக் காட்சிகள் உமது கண்களிலே ஒருநாளாவது பட்டிருக்குமா?

நாடாரே! நல்லவரே நமது நாட்டு மக்கள் வாழ்க்கைச் சித்திர மய்யா இது—வாய் வேதாந்தமல்ல.

அன்பே! ஆரணங்கே! ஆறுமுறை சிறைசென்றிருக்கிறேன். அதன் பலன் தாண்டி இன்று வந்திருக்கும் சுதந்திரம், எனக்கு வாழ வழி கிடைக்கும் கவலை கொள்ளாதே! சென்னைக்குச் செல்கிறேன், தலைவரைப் பார்க்கிறேன், தருவாரடி அவர் நிச்சயம் எனக்கொருவேலை. வழிச்செலவுக்கு உன் தாலியை அடகு வைத்தேனும் ஆறு ரூபாய் கொடடி என்று வாங்கிக் கொண்டு, உங்களைப் போன்றுரைத் தேடித் தேடி அலைந்து விட்டு உங்கள் பேட்டி கிடைக்காமல் குழாய்த் தண்ணீரைக் குடித்து

விட்டு வீதியின் கோடியிலே புரண்டு கிடக்கும் உருவங்களைப் பற்றி நீர் அறிந்த துண்டா?

ஆங்கிலேயன் ஆட்சியல்ல அப்பா! அண்ணல் காந்தியடிகளின் சீடர்கள் ஆளுகிருர்கள், மில்லிலே முதலாளி கொள்ளையடிப்பது போதாதென்று கருஞ் சந்தையிலும் விற்றுக்களிக்கின்ருனே, நமது பசிபோக்க இன்னும் நாலு ரூபாய் அதிகம் கொடுக்காதவரை எதிர்த்து 'ஸ்ட்ரைக்' செய்தால் நிச்சயம் கிடைக்கும் நீதி. 'கா— —சர்' அவர் தானப்பா இப்போதைய தலைவர் மந்திரிகள் கூட மருளுகின்றனர் அவர் தம் உருவைக் கண்டு, ஆகவே போராட்டத்தில் நானும் கலந்து கொள்கிறேன் என்று கூறி அறப்போர் தொடுத்த அப்பாவிகளில் பலரை உங்கள் ஆட்சி, மண்டையைத் தடி கொண்டு பிளந்து மார்பைத் துப்பாக்கியால் துளைத்து தந்தைக்கு மகனில்லாமல் செய்து விட்டதைப் பற்றி யெல்லாம் நீர் என்ருவது நினைத்திருப்பீரா?

சாலையின் இரு ஓரங்களிலும் சாய்ந்து கிடக்கும் உருவங்களைப் பற்றி எண்ணி இருப்பீரா? காலையிலிருந்து வயலில் வெட்டிய புல்லைக் கொண்டு வந்து மாலையிலே விற்ருல் தான் 'வயறு கழுவ' முடியும் என்று தூக்கி வந்து சாலையின் இடையிலே போட்டுக் கொண்டு தள்ளாடி விழும் சரிந்துபோன சமுதாய மக்களைப் பற்றி சிந்தித்திருப்பீர்களா?...............

இன்னேரன்ன! இந்த நாட்டின் சிதைந்த மக்களின் வாழ்வை நேர்படுத்த நீர் இது வரையில் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எத்தனை? தீட்டிய திட்டங்கள்

யாவை? நடத்திய போராட்டங்கள் எத்தனை? சீமான்களை மேலும் சீமான்களாக்கினீர்! பூமான்களின் பூமிக்குப் பாதுகாப்பு தேடிக் கொடுத்தீர்! புகழ் பெற்றோருக்கு பட்டங்கள் பெற்றுக் கொடுத்தீர்! பதவிப் பிரியர்களுக்கு உதவிகள் பல செய்தீர்.

இது தவிர நீர் தமிழ் நாட்டு (காங்கிரஸ்) தலைவர் பதவி ஏற்றதிலிருந்து இன்று வரையில் இந்நாட்டு மக்களுக்காக செய்த வேலைகள் என்ன என்று கேட்கிறேன்? உம்மை மாபெரும் தலைவராக ஆக்கிக்கொண்டதைத் தவிர. தீட்டிய உருவான திட்டங்கள் என்ன என்று கேட்கிறேன்—உம்மைவிட செல்வாக்கில் யாரும் மிஞ்சக் கூடாது என்று பிரயாசைப்பட்டதைத் தவிர?

ஐயா, தலைவரே! கோபப்படாமல் ஆத்திரத்தில் நிதானத்தை இழக்காமல் நான் கூறுபவைகளை நன்றாக சிந்தித்துப் பார்த்துப் பதில் கூறுங்கள்; மேல்கண்டவைகளுக்குப் பதில் உண்டு அல்லது இல்லை என்றாவது சொல்லிவிடுங்கள்?

நீர் செய்யவேண்டியவேலை, உமது இனத்திற்கு ஆற்ற வேண்டிய மாபெரும் தொண்டு எத்தனையோ இருக்க வெறும் தேர்தல் பிரியராகத் திரிகிறீரே இது என்?

இப்பொழுது நீர் நடத்த யிருக்கும் - நீர் போட்டியிட நியமித்திருக்கும் அங்கத்தினர்கள் துவங்கியிருக்கும் ஜில்லா போர்டு தேர்தல்களினால், இந்த நாட்டு ஏழைகளுக்கு இன்னலிலே வாடுபவர்களுக்கு ஒரு பிடி மண், அளவாவது பலனுண்டா? நன்மையுண்டா? உம்மைத்

தொந்திரவுபடுத்தும் பதவிப் பிரியர்கள் பலனடைவதைத் தவிர ?

மகாத்மாவின் சீடரே! இதுதானா காங்கிரஸினால் நாட்டுக்கு ஏற்படும் பலன்; இது தானா காந்தியத்தின் தத்துவம் ?

ஐயோ! அருமைத் தமிழரே! ஏனய்யா இப்படி ஏமாந்து நிற்கிறீர்; உமது பெயர் சரிந்துகொண்டே போகிறதே; வடவர் சூழ்ச்சி உம்மை விரைவில் வீணராக்கிவிடப் போகிறதே; நீர் செல்லாக் காசான பிறகு சிந்தித்து சிந்தித்து சீரழியப்போகிறீர்.

அந்த நிலைக்கு இப்பொழுது இடங்கொடுத்துவிடாதீர். உம்மால் உருவான வேலை எதையும் செய்யமுடியாவிட்டால் வாளா விரும் - வம்பு வேண்டாம் - வீம்பு பேசாதீர் - எமது வேதனையைக் கிளராதீர்...

நீர் எதிர்க்கட்சிகாரர்களுக்கு சவால் விடுத்துப்பதில் கேட்பதற்கு முன்பு உம்மையே ஒரு முறை கேட்டுக் கொள்ளும் நீர் செய்வது சரிதானா என்று...

தலைவரே! தகுந்தவரே! தமிழரே! தன் மான இனத்தில் பிறந்தவரே! நான் கேட்டவைகளுக்கு நேர்மையான பதிலுண்டா? உண்டா?? உண்டா???

இல்லை! இல்லை!! இல்லை!!! ஆமாம் இல்லைதான்— நிச்சயமாக இருக்கவும் முடியாது உம்மால் கூறவும் முடியாது.

ஆனால் உம்மால் இப்போதைக்கு நாங்கள் எழுதிய புத்தகங்களைப் பறிமுதல் செய்ய முடியும் நாடகங்களைத்

தடைசெய்ய முடியும், ஏன் எங்களைக்கூட உமது இஷ்டப் படி எதையும் செய்ய முடியும்............

ஏன் முடியாது......உமது அனுபவப் பள்ளியிலே பல ஆண்டுகளுக்கு முன்பு உமக்கே ஏற்பட்ட பரிச்சயம் தானே ஐயா இது.

ஆங்கிலேயனது—அந்த நாள் தர்பார் படலத்தைக் கொஞ்சம் புரட்டிப்பாரும்......

"அப்பப்பா! என்ன கொடுமை, நீடிக்குமா இந்த நீசர்களின் ஆட்சி—கண்டதுண்டா இந்த கயவர்களின் வெறியைப் போன்று—தாங்காத வரிகளைப் போட்டு ஏழைகளை வதைக்கும் இந்த ஈனர்கள் என்று தொலைவரோ! எடுத்ததற்கெல்லாம் அடக்குமுறை ஆயுதத்தைப் பிரயோகிக்கும் அற்பர்கள் என்று அழிவரோ! இந்த ஆளும் வர்க்கத்தின் தூண்களாக விளங்கும் துரோகிகள் என்று ஒழிவரோ! ஐயோ......செல்வம் கொழிக்கும் நாட்டில் பிறந்தோமே இன்று சீரழிந்து நிற்கின்றோமே! அறிஞர்களை ஈன்ற நாடே!—அன்பை வளர்த்த நாடே!—எதிரிகளுக்கும் இரக்கம் காட்டிய நாடே!—வறுமையற்று வாழ்ந்த நாடே!—வம்பர்கள் இன்னல் அற்ற நாடே! இன்று நீ அழிந்து விட்டாயே அக்ரமக் காரர்கள் கரத்திலே அகப்பட்டு, ஐயோ!!

"தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா இப்பயிரை
கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமே!"

என்று எத்தனை மேடைகளில் அழுதீர்—மனம் வெந்தீர்.

அதேதான் இன்று எங்கள் நிலையும். காலம் மாறியது........... நீரே உணர்ந்தீர் நேர்மை வென்றதை மறுபடியும் காலம் மாறும் என்பதை மறந்துவிடாதீர். மறந்திருந்தால் யாரையாவது கேட்டுத் தெரிந்துகொள்ளும். சன்யாட்சன் பெயர் மறைந்தது—கோமின்டாங் தோற்றது—டிவேலரா வீழ்ந்தது—ஹிட்லரின் அழிவு—முசோலினியின் முடிவு—ஜார் மன்னனின் வீழ்ச்சி—ஆங்சான் கோஷ்டியின் அலங்கோலம், இவைகளெல்லாம் எதனால் ஏற்பட்டது என்று?

இவைகளுக்கு பதில் நிச்சயமாக உண்டு!

தலைவரே ....பதில் உண்டு!!

ரெயின்போ பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி.